# பாலாஜியுடன் ஸ்பெஷல் மீட்!

**ச**மீபத்தில் கிரிக்கெட் அகாதமி ஒன்றின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட லட்சுமிபதி பாலாஜியிடம், ஸ்பெஷல் பேட்டி எடுக்க விழா நடக்கும் இடத்துக்கு சுட்டி ஸ்டார்ஸ் சென்றார்கள். ரசிகர்களின் அன்புப் பிடியிலிருந்து அவரை மீட்பதே சிரமமாக இருந்தது. பிறகு, அகாதமியின் அருகில்... ரம்மியமான சூழலில் அமைந்த இடத்தில் அவருடனான கலக்கல் பேட்டி...

**சாம்பியன்ஸ் லீக் டி20 போட்டியில் உங்களுக்குக் கிடைத்த அனுபவங்களைப் பற்றிச் சொல்லுங்க?**

அதைப் பற்றி சொல்ல பல விஷயங்கள் இருக்கு. இதில், கேப்டன் டோனி கடைசிவரை சிறப்பாக எங்களை வழி நடத்தியதால், நாங்க சாம்பியன்ஸ் டிராபியை ஜெயிச்சோம்!

**சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் உங்களுக்குப் பிடித்த ப்ளேயர், ஃபிரெண்டு யார்?**

என்னுடைய பெஸ்ட் ஃபிரெண்ட் முத்தையா முரளிதரன்தான். அடுத்து டோனி, பொலிங்கருடன் நன்றாகப் பழகுவேன்.

**பாகிஸ்தான் டூரில் அக்தர் பாலை சிக்ஸ் அடிச்சப்ப உங்களுக்கு எப்படி இருந்தது?**

அதுதான் என்னோட முதல் இன்டர்நேஷனல் சிக்ஸர். முதல் சிக்ஸரே எனக்கு மறக்க முடியாத அளவுக்குப் பேர் வாங்கித் தந்தது. அன்றைய பாகிஸ்தான் அதிபர் பர்வீஸ் முஷரப் என்னை வாழ்த்திப் பேசினார்.

**உங்க குரு யார்?**

ஆரம்பத்தில் என்னை கிரிக்கெட் பக்கம் கொண்டு வந்தவர், என் மாமா என்.பி.பாலாஜி. அதற்குப் பிறகு நிறைய பேர் இருக்காங்க.

**உங்க பெற்றோர் ஆதரவு இருந்ததா?**

ஆரம்பத்தில் அப்பா, அம்மா அவ்வளவா சப்போர்ட் பண்ணலை... என்கரேஜ் பண்ணது என் சகோதரிதான்.

**மாணவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

மாணவர்கள் எதற்கும் பயப்படக்கூடாது. எந்த விஷயத்திலும் தைரியமா செயல்படணும்.




**தற்போதைய இந்திய அணியைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

இப்போதைய இந்திய அணி பலமான அணி. சச்சின், டோனி ஆகியோரின் திறமையால் இந்த முறை நாம் உலகக் கோப்பையை உறுதியாக வெல்வோம்.

**தோல்வியிலிருந்து மீள்வது எப்படி?**

வெற்றி, தோல்வி என்று எதுவும் என்னை பாதிக்காது. தோல்வியில் இருந்தே வெற்றிக்கான வழி கிடைக்கும். எனவே, ஒரு இலக்கைக் கொண்டு முன்னேற வேண்டும். விடாமுயற்சியுடன் கடமைகளைச் செய்தால், கண்டிப்பாக வெற்றி அடையலாம்.

**படிக்க, விளையாட நீங்க எப்படியெல்லாம் டைம் மேனேஜ் பண்ணினீங்க?**

நான் அதிகாலை 3.30 மணிக்கே எழுந்து ஓட்டம், உடற்பயிற்சி, கிரிக்கெட் பயிற்சி என எல்லாவற்றையும் முடித்துவிட்டு படிக்கப் போவேன். மீண்டும் மாலையில் பிராக்டீஸ், பிறகு படிப்பு என ரெண்டும் பாதிக்காமல் பார்த்துக் கொண்டேன். நீங்களும் அதுபோல படிப்பை பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.



**போலிங் போடுவதற்கான டிப்ஸ் யார்கிட்ட கேப்பீங்க?**

நமக்கு உலகக் கோப்பையை ஜெயித்துக் கொடுத்த கபில்தேவ் அவர்களிடமும், பாகிஸ்தானின் இம்ரான்கானிடமும் நான் பந்து வீச்சின் நுட்பங்களை கேட்டுத் தெரிந்து கொள்வேன். அவர்களும் ஆவலுடன் கற்றுக் கொடுப்பார்கள்.

**உங்களது ரோல் மாடல் யார்?**

வேறு யாராக இருக்க முடியும்? சாதாரண கிராமத்தில் பிறந்து, தனது படிப்பாற்றலால் விஞ்ஞானியாகி, இந்தியாவின் உயர்ந்த பதவியையும் வகித்த அப்துல் கலாம்தான். எனக்கு அவர் காட்பாதர் மாதிரி. உங்களைப் போன்ற சுட்டிகளிடம்தான் எதிர்கால இந்தியாவின் வளர்ச்சி இருப்பதாக நம்பிக்கை வைத்திருப்பவர். அவர்தான் நம் எல்லோருக்கும் ரோல் மாடல்!

ரஞ்சிப் போட்டியில் கலந்துகொள்ளும் அவசரத்தில் இருந்தாலும், சுட்டிகளுக்கு நேரம் ஒதுக்கி பேட்டியளித்ததற்கு நன்றியைத் தெரிவித்து மகிழ்ச்சியுடன் விடைபெற்றோம்.

படங்கள்: து. மாரியப்பன்

ப.குமுதன், இரா.வாஞ்சிநாதன்.
மு.அமீரா யாஸ்மின், வே.அருணா மாதங்கி,
பா.கவின், சீ.அ.நரேந்திர குமார்

**செ**ன்னையை அடுத்த கும்மிடிப்பூண்டியில் 10.10.10 அன்று M.L.R கிரிக்கெட் அகாதமியை தொடங்கி வைத்தார், 'சென்னை சூப்பர் கிங்ஸ்' மற்றும் இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் லட்சுமிபதி பாலாஜி.



பாலாஜி பேசுகையில்... "எதையும் நம்மால் முடியும் என்று நினைத்து செயல்படவேண்டும். கிராமத்தில் இருந்து வரும் வீரர்களாலும் சிறப்பாகச் செயல்பட முடியும். அதற்கு டோனி, பதான் சகோதரர்களே சிறந்த உதாரணம். இங்கு பயிற்சிபெறும் நீங்கள், அவர்களைப் போல் சாதிக்க வாழ்த்துகள்" என்றார். இந்த அகாதமியை உருவாக்கிய ராஜேஷ் கூறுகையில்... "கிராமத்து இளைஞர்கள் தங்களின் கிரிக்கெட் திறமையை முறைப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்த அகாதமியை ஆரம்பித்தேன். இதை தொடங்கி வைக்க பாலாஜியை அணுகியபோது, 'கிராமத்திலிருந்து வரும் வீரர்கள் எதையும் தைரியமாக எதிர்கொண்டு சாதனை புரிவார்கள். அவர்களை நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டும். எனவே, நான் அவசியம் கலந்துகொள்கிறேன்' என்று உடனே சம்மதித்தார்" எனச்சொல்லி மகிழ்ந்தார்.